## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை – திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12–ஆம் நாள் புதன்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 ஆடித் திங்கள் 27–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.411/2019–ல்**
**வழக்கிடை விண்ணப்ப எண்.08/2026**

**தீபக் பிரசன்னா ... மனுதாரர்/பிரதிவாதி**

**–எதிர்–**

**சரவணன் ... எதிர்மனுதாரர்/வாதி.**

இந்த மனு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.S.டிட்டோபிரபு** அவர்களும் எதிர்மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.B.செந்தில்குமார்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்து-வந்த இந்த மனுவில் இந்த நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

**முகவுரை**

எதிர்வழக்குரையுடன் தாக்கல்செய்யப்படா ஆவணங்களை பிரதிவாதி தரப்பு சாட்சியத்தின்போது முன்னிடுவதற்கு நீதிமன்றத்தின் அனுமதி கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 08-ஆம் 1A(3)-ஆம் பிரிவின்கீழ் மனுதாரர்/பிரதிவாதியால் இம் மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

01. எதிர்மனுதாரர்/வாதி மனுதாரர்/பிரதிவாதியிடமிருந்து 16,00,000/- உரூபாயை வசூலிக்க முதலேற்பு வழக்கைத் தொடுத்துள்ளார். மனுதாரர்/

IIIrd ADJ Court, Salem

பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல்செய்து வழக்கைக் கடுமையாக எதிர்த்து நடத்திவருகிறார். தவிர்க்கமுடியாத சூழ்நிலையால் மனுதாரர்/பிரதிவாதியின் எதிர்வாதத்திற்கு அடிப்படையான ஆவணங்களை எதிர்வழக்குரையுடன் தாக்கல்செய்ய முடியவில்லை.

02. பிரதிவாதி தரப்பு சாட்சியம் பதிவுசெய்ய 15.06.2026 ஆம் தேதி யன்று வழக்கெடுப்பு இருந்தது. அன்று மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் சாட்சியமளிக்காததால் சாட்சியம் முடிக்கப்பட்டு விவாதத்திற்காக வழக்குப் போடப்பட்டது. பிரதிவாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறக்கக் கோரி மனுதாரர்/பிரதிவாதி தனியாக தாக்கல்செய்த விண்ணப்பம் வழக்கிடை விண்ணப்ப எண் 07/26 ஆக நிலுவையில் உள்ளது. இந்த மனுவுடன் தாக்கல்செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் இந்த வழக்கை அறுதியாக முடிவு செய்ய உதவும். ஆகையால், அவற்றைத் தாக்கல்செய்ய அனுமதி அளித்து ஆணையிட வேண்டும். இல்லையேல் மனுதாரர்/பிரதிவாதிக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பும் இன்னலும் ஏற்படும்.

## எதிருரையின் சுருக்கம்

03. கடன் நிலுவை 21,80,734/- உரூபாய்க்கு எதிர்மனுதாரர்/வாதி வழக்கிட்டுள்ள நிலையில் 16,00,000/- உரூபாய்க்கு வழக்கிட்டுள்ளதாக மனுதாரர்/பிரதிவாதி பொய்யுரைத்துள்ளார். பிரதிவாதி தரப்பு சாட்சியம் பதிவுசெய்ய நீதிமன்றம் பல ஒத்திவைப்புகள் வழங்கியும் மனுதாரர்/ பிரதிவாதி தரப்பில் சாட்சியமளிக்க முன்வராததால்தான் 15.06.2026-ஆம் தேதியன்று அவர் தரப்பு சாட்சியத்தை நீதிமன்றம் முடித்து ஆணையிட்டது. வாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறந்து சான்றாளரை குறுக்குவிசாரணை

III rd ADJ Court, Salem

செய்ய அழைக்க வேண்டும் என்று மனுதாரர்/பிரதிவாதி தாக்கல்செய்த வழக்கிடை விண்ணப்ப எண்கள் 5/26,6/26 ஆகியன ஏற்கனவே தள்ளுபடிச் செய்யப்பட்டுவிட்டன. அவற்றிலும் மனுதாரர்/பிரதிவாதி தனக்கு உடல்-நிலை சரியில்லை என்று காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. வழக்கிடை விண்ணப்ப எண்கள் 5/26, 6/26 ஆகியவற்றில் 13.03.2026 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையை எதிர்த்து சீராய்வு மனு தாக்கல்செய்யப்போவதாக சொன்ன மனுதாரர் அவ்வாறு எதையும் தாக்கல்செய்ததாக தெரியவில்லை. வழக்கு நடவடிக்கையை காலதாமதப் படுத்தவும் எதிர்மனுதாரர்/வாதியை தொந்தரவு செய்யவும் மனுதரர் இதுபோன்ற மனுக்களை தாக்கல்செய்துவருகிறார்.

04. எதிர்வழக்குரையுடன் ஆவணங்களை தாக்கல்செய்யாததற்கு மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணம் பொய்யானது. பிரதிவாதி தரப்பில் சாட்சியம் அளிப்பதற்கு போதிய வாய்ப்பு அளித்தப் பிறகு 15.06.2026-ஆம் தேதியன்று இந் நீதிமன்றம் அந்த வாய்ப்பை முடித்து ஆணையிட்டது. வழக்கிடை விண்ணப்ப எண் 7/26-இல் 20.07.2026-ஆம் நாள் நிரூபண ஆணையுறுதி தாக்கல்செய்ததாகவும் இந்த மனுவுடன் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களையும் குறியீடுச்செய்ய வேண்டும் என்றும் மனுதாரர் கூறியுள்ளது பொய்.

05. வழக்கிடை விண்ணப்ப எண்கள் 05/26, 06/26 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்ட ஆணையை எதிர்த்து மனுதாரர்/பிரதிவாதி தாக்கல்செய்த சீராய்வு மனு எண் 4407/2026 மற்றும் 4411/2026 ஆகியன 31.07.2026 ஆம் தேதியன்று மாண்பமை உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடிச் செய்யப்பட்டு

III rd ADJ Court, Salem

-விட்டன. வழக்கு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் மனுதாரர் இந்த மனுவைத் தாக்கல்செய்துள்ளார். ஆகையால், இந்த மனுவைத் தள்ளுபடிச்செய்ய வேண்டும்.

### தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

06. **இம் மனு அனுமதிக்கத்தக்கதா?**

### தீர்முடிவு

**07.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. இந் மனுவுடன் மொத்தம் 6 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் முதல் ஆவணம் 28.08.2019-ஆம் தேதி யிட்ட மனுதாரர்/பிரதிவாதி அனுப்பிய பதிலறிவிப்பு ஆகும். அது ஏற்கனவே வாதி தரப்பு 03-ஆம் சான்றாவணமாக குறியீடுச் செய்யப்பட் டிருக்கிறது. எஞ்சிய 02 முதல் 06 வரையிலான ஆவணங்கள் COS 18/2019 என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட வழக்குரை, எதிர்வழக்குரை, வாதியின் சாட்சியம், வாதி தாக்கல்செய்த திரும்பப்பெறுவதற்கான குறிப்பாணை, ஆணை ஆகியவற்றின் சான்றிட்ட நகல்களாக உள்ளன.

**08.** மேற்சொன்ன வழக்கு நடவடிக்கை இந்த வழக்குத் தொடுக்கப் பட்ட காலகட்டத்தில் தொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் எதிர்வழக்குரை தாக்கல்செய்யப்பட்டபோது அவற்றைத் தாக்கல்செய்திருக்க வாய்ப்பு இல்லை. வாதி தரப்பு 01-ஆம் சான்றாளர் குறுக்குவிசாரணையின்போது மேற்சொன்ன வழக்கு நடவடிக்கையை ஒப்புக்கொண்டுள்ளார்.

III rd ADJ Court, Salem

09. இந்த மனுவை அனுமதிப்பதால் காலதாமதத்தால் ஏற்பட்ட இன்னலை தவிர வேறெந்த அநீதியும் எதிர்மனுதாரர்/வாதிக்கு விளையாது. காலதாமதத்தால் ஏற்பட்ட இன்னலை செலவுத்தொகை செலுத்த ஆணை யிடுவதன் மூலம் ஈடுசெய்ய முடியும் என்று இந் நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதிமுடிவு**

10. இறுதியாக, மனுதாரர்/பிரதிவாதி 17.08.2026-ஆம் தேதியன்றுக்குள் 500/- உருபாயை எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத்தொகையாக கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. தவறினால் இந்த மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும்.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V
Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.08.12 18:33:11 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட /அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு – இல்லை**

III rd ADJ Court, Salem